25th October 1971]

ஆரம்பிக்கப்பட்ட செங்கம் பண்ணையில் வறட்சிப் பயிர்களைத்தான் உண்டாக்குகிறார்கள். தண்ணீர் வசதி போதுமானதாக பெற்று பிறகுதான் துவக்க வேண்டுமென்ற காரணத்தால், இப்போது அந்த வசதி பெற்றதால், அந்தத் திட்டம் அண்மையில் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

Pesticide.

*18. † Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the name of the chemical pesticide that is being used in Aerial spraying by the State Agriculture Department; and

(b) whether it is in any way harmful to the human beings in the area?

பூச்சிக் கொல்லி மருந்து

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில வேளாண்மைத் துறையால் விமானத்திலிருந்து மருந்து தெளிப்பதற்குப் பயன் படுத்தப்படும் இரசாயன பூச்சிக் கொல்லி மருந்தின் பெயர் என்ன?

(இ) அப்பகுதியிலுள்ள மனிதர்களுக்கு அது துன்பம் அளிக்கக்கூடியதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இன்ன வியாதி யுள்ள பயிருக்கு இன்னவிதமான பூச்சி மருந்துதான் உபயோகப் படுத்த வேண்டும் என்று பயிர் பாதுகாப்புக் குழு சிபாரிசு செய்த மருந்துகளே விமானம் மூலம் பூச்சி தெளிப்புக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன. 1970-71-ம் ஆண்டில் ஆகாய விமானம் மூலம் தெளித்த பூச்சி மருந்துகளின் விவரப்பட்டியல் @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) பயிர்களுக்கு விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதினால் எவ்வித தீங்கும் மனிதர்களுக்கு ஏற்பட்டதாக தகவல் ஏதும் இதுவரை விவசாய இயக்குநருக்கு வந்ததில்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to state whether the State Agricultural Department has been using 'Bromin' for the preservation of foodgrains and other cereals?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இது பயிரைப் பற்றிய கேள்வி. உயிரைப் பற்றிய கேள்வி தனியாகப் போட்டால், அதைப்பற்றிச் சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பூச்சி மருந்துகள் என்று கிட்டத்தட்ட ஏழெட்டு மருந்துகளைக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றில் சில விலை அதிகமானவையாகவும் சில விலை குறைந்தும் சில

---

† Postponed from the list of questions fro 22nd October 1971.

@ Printed as Appendix II on page 231

[25th October 1971

சந்தர்ப்பங்களில் வேண்டும்போது வேண்டிய மருந்து கிடைக்காமலும், இருக்கின்றது. சில சமயம் சில மருந்துகளை விலை அதிகமாகக் கொடுத்தும் வாங்க வேண்டியிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளைக் கலந்துகொண்டு அதற்குப் பிறகு மருந்து அடிக்கும் நிலைமையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : இந்த மருந்துகளைப் பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் ஒரு குழுவை நியமித்திருக்கிறது. அரசாங்கம் எந்தெந்த மருந்துகளைப் பயன்படுத்தலாம் என்று அத்தாட்சி கொடுத்த பிறகு, அதைப் பெற்றுக்கொடுத்தால், அதை இந்தக் குழு பரிசீலனை செய்கிறது. பரிசீலனைக்குப் பிறகு அவர்கள் இன்னின்ன மருந்துகளை வாங்கலாம் என்று சொல்வது ஒரு வகை. இன்னொரு வகை, சற்று விலை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை, சில மருந்துகள் தேவை என்று விவசாயிகள் சொன்னால், அதைச் சிபாரிசு செய்வது. விலை அதிகமாக இருந்தாலும், அதை அவர்கள் இஷ்டப்படி வாங்குகிறார்கள். விலை குறைவாகவும் ரேட் காண்ட்ராக்ட் முறையில் வாங்கவும் செய்கிறார்கள். சில இடங்களில் விவசாயிகள் உதாரணமாக ஃபாலிடால் வேண்டுமென்கிறார்கள். அது விலை அதிகமுள்ள பூச்சி மருந்து. அதை உபயோகித்தால் லாபகரமாக இருக்கிறது என்று விவசாயிகள் விலை அதிகமாக இருந்தாலும் விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை.

Higher Rates for Electricity

* 33 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Government have agreed to pay higher rates for electricity to Kerala Government as per the renewed agreement in 1970;

(b) if so, the additional expenditure to be incurred for a year; and

(c) the reasons for the increase in rates?

மின்சக்தி கட்டண உயர்வு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ல் புதுப்பித்துக் கொண்ட ஒப்பந்தத்தின்படி மின்சக்திக்காக அதிகக் கட்டணங்களை கேரள அரசுக்குக் கொடுக்க இவ்வரசு ஒப்புக்கொண்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், ஓராண்டுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவு எவ்வளவு?

(உ) கட்டண வீதங்களில் ஏற்பட்ட உயர்வுக்குக் காரணங்கள் யாவை?